உ

சிவமயம்.

1367

குழந்தையம்பதியெனும் கட்டிக்குளம்

இராமலிங்க சுவாமி பேரில்

குழந்தையம்பதியெனும் கட்டிக்குளம்

முத்தமிழ் ப்ரம்மஸ்ரீ வே. இராமலிங்கப் புலவரவர்கள்

இயற்றிய

ஆனந்தக்களிப்பும்

ஷையாரின் புத்திரர் அஷ்டாவதானி

ப்ரம்மஸ்ரீ ராம. குழந்தைவேலாச்சாரியவர்கள்

செந்தமிழ்க்

காவடிச்சிந்தும்.

இஃது

மானாமதுரை

...ா. நாகலிங்கக் கோனாரவர்கள்

...ஸ்ரீ ராமலிங்கம் பிரஸில்

...கிப்பிக்கப்பெற்றது.

Registered. [-04-0.

14 SEP 1934
MADRAS

026.38.2195/பு
N32.
171295

உ
சிவமயம்.

குழந்தையப்பதியெனும் கட்டிக்குளம்

இராமலிங்க சுவாமி பேரில்

இயற்றிய

செந்தமிழ்க்

காவடிச் சிந்து.

இஃது

மானாமதுரை அஷ்டாவதானி

ப்ரம்மஸ்ரீ ராம. குழந்தைவேலாச்சாரியவர்கள்

இயற்றி

மானாமதுரை

மா. நாகலிங்கக் கோனாரவர்கள்

இராமலிங்கம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1933. [0-4-0.

MADRAS

171296
600 008.

உ
சிவமயம்.

செந்தமிழ்க் காவடிச்சிந்து

முகவுரை.

—:§:—

சிந்துயென்பது பிரபந்தங்களின் பாகுபாடுகளிலொன்று. சிந்துகளை அநேக வர்னமெட்டுகளில் பாடலாம். ஆனால், இச்சிந்துகளை எட்டுச் சந்தங்களால் இப்பாண்டிய நாட்டில் குழந்தையம்பதியெனும் கட்டிக்குளத்தின்கண் வீற்றிருக்கும் இராமலிங்க சுவாமி பேரில் இயற்றியிருக்கிறது. இதில் சுதிக்யானம், தாளக்யானம், இராகக்யானம் முதலியவைகளோடு சங்கிதக்யானமும் பொருந்தும்படி அமைக்கப்பெற்றிருக்கிறது. இன்னும் இதில் சொற்சுவை, பொருட்சுவைகளும், செந்தமிழ் பதங்களும் மலிவாகியது. இந்நூலைப்படிப்பவர்களும், பாடக் கேட்பவர்களும் ஆனந்திப்பார்களென்பது திண்ணம். இக்காவடிச் சிந்துவை இயற்றிய விஸ்வகுல திலகராகிய ப்ரம்மஸ்ரீ ரா. ம. குழந்தைவேலாச்சாரியார் இப்பாண்டிய நாட்டில் சோமநாதக்கடவுள் வீற்றிருக்கும் மானாமதுரையென்னும் க்ஷேத்திரத்தில் வசிக்கிறவர். இவர் முத்தமிழ்ப் புலவராகிய ப்ரம்மஸ்ரீ வே. இராமலிங்கப்புலவரவர்கள் புத்திரர். இவர் பழனியம்பதியில் வீற்றிருந்த முத்தமிழ் சக்ரவர்த்தியாகிய ப்ரம்மஸ்ரீ மு. மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்களிடம் பிரதம சிஷ்யராயிருந்து கல்விகற்று அதிர்தேற்சியடைந்தவர். இத்துடன் இராமநாதபுரம் ஸ்ரீமான் பாஸ்கர சேதுபதியவர்களிடம் ஏற்றடி சமஸ்தி பாடி பரிசு பெற்றவர். இவர் சங்கிதம், சாயித்யம், அஷ்டாவதானம், பக்த விஷயம், வேதாரம்பம், பௌரோஹிதம், உபன்யாசம் முதலியவைகளிலும் தேர்ச்சியடைந்தவர். இக்காவடிச் சிந்துடன் ஷெயாரின் பிதாவாகிய ப்ரம்மஸ்ரீ வே. இராமலிங்கப் புலவரவர்களியற்றிய குழந்தையம்பதி கட்டிக்குளமெனும் க்ஷேத்திரத்தில் வசிக்கும் இராமலிங்க சுவாமி பேரியற்றிய ஆனந்தக்களிப்பு யென்னும் பிரபந்தமும் இத்துடன் அச்சிடப்பட்டிருக்கிறது. மேலும் இவர் சித்திரகவி, திரிபு, யமுகம், மஞ்சரி, திருமுகம், காதல், வண்ணம், திருநோக்கழகிய சுந்தரமாலை, பழனிக்குருபர மாலை, மடல், சங்கீதம் இன்னும் அநேக பிரபந்தங்களியற்றியவர். இவர் புத்திரர் ப்ரம்மஸ்ரீ குழந்தைவேலாச்சாரியாரால் இரண்டு பிரபந்தங்களை அச்சிடப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

சூ. பொன்னய்யா பிள்ளை,
திருப்பாச்சேத்தி.

2333
894.8111

Q26:98.12143
N13

குழந்தாபுரியென்று பெயர் விளங்கிய

கட்டிக்குளம்

தி. மு. தி. சிவனு சேர்வைகாரர் அவர்கள் பாடிய

எழுசீர்க்கழில் நெடிலாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட கலைமது வார்கண்டு நடனமிடு
தேவியம் பரதர் செல்வி
திகிர்கொண்டு வருமுதிய நொடிகொண்டு விலைபயினு
செந்திலம் பதிகா வலன்
செட்டியம் பீதுபுகழ் ரெட்டியன் ஞைபலை
செலுத்தும் ப்ரசண்ட வாக்காய்த்
தெந்தினந் திமிதிமெனுஞ் சந்தமும் பல்வழகுஞ்
செந்தமிழ்ச் சிந்தி யற்றக்

கார்கொண்ட கவியரசர் பலகோடி யத்தமிழ்க்
கற்றிடக் கருத னூற்றூர்
கதிமதுர திரிபுதிரி கடுகுபல வந்தாதி
கமழ்யமக மிகு மஞ்சரி
கலம்பகம் பலநாக பந்தம்ப்ர பந்தங்
கணக்கொடு வகுக்கு நிபுணன்
கனமாம் பழக்கவிச் சிங்கமென வேபுகழ
கவிச்சக்ர வர்த்தி மரபிர்ப்

பார்கொண்ட துதிமதுர கவிராஜ னரும்ப்ர
பலராம லிங்க மருளாற்
பலகலை வகுத்திட விலக்கண விலக்கியப்
பருங்கட லருந்து மேகம்
பாரகா வியமதனி லட்டாவ தானம்
பகுக்குமுயர் சம்ப்ர தாயன்
பண்புசேர்ந் திடவருகு பூந்தைவே லாச்சாரி
பரிவுட னிசைந்தெ வகையும்

ஏர்கொண் டிடுந்தென் குழந்தைநகர் மேவிய
விராம லிங்கக் கடவுண்மீ
தெழில்பெருஞ் செந்தமிழ்க் காவடிச் சிந்தினை
யியற்றியே யன்பு கூர
வெத்தகைய சொற்சுவை பொருட்சுவை யனைத்துட
னிலங்கு கற்பனை விசேட
மினிதமுத மமிதமென மிகுபுலவ ரகமகிழ
விசைத்தனன் வாழி மாதோ.

மானாமதுரை

Special Magistrate,

தி. சி. இராம குஞ்சரமாச்சாரியாரவர்கள்

புத்ரன்

ப்ரம்மஸ்ரீ திருநேத்திரானந்தம் ஆச்சாரியார் F. A.

இயற்றிய சாற்றுக்கவி.

துதிபெருகுந் தென்குழந்தை மாநகர் வாழ்
    ராமலிங்க சுவாமி தன்மேல்
பதியினுள்ளோர் கொண்டாட செந்தமிழ்க் காவடிச்
    சிந்தைப் பாடினான்மா
நிதிவிஸ்வ குலதிலகன் ராமலிங்கக் கவிராஜ
    னீன்ற புத்ர
நதியுருமா னாமதுரை குழந்தைவே லவதானி
    நாவல் லோனே

உ

சிவமயம்.

ஆசிரிய விருத்தம்.

திருமிகு குழந்தைநகர் மகிழ்பெருகு
        மெஞ்ஞான சின்மயானந்த வுனது
சிதமலரிணை கழலையென்றைக்கும் நம்புமென்
        சித்தத்தில் நிற்க வேண்டுஞ்
சித்திதரு குஞ்சரங் குமரகுருபர முருகர்
        தேசுருங் கதிரேச னுங்
தென்கயிலை சங்கரன் மாதவனிஷ்ட குல
        தேவதைக ளுதவ வேண்டும்.
அருள்பெருகு பீஸ்வரி திருமகள் கலையெனிட
        மகலா திருக்க வேண்டும்
அஷ்டாக்ஷரம் பஞ்சாக்ஷர சடாக்ஷரமும்
        அனுதினம் நினைக்க வேண்டும்
அரிய தமிழோர் சிவனடிகளுடன் சிவபக்தி
        அழியா திருத்தல் வேண்டும்
அனைபிதா சோதரர்கள் யேழைகளிவர்களிட
        மன்பு பாராட்ட வேண்டும்
குருமருவு தனதுயிரை பிறர்கள்தன் னுயிரெனக்
        கொண்டாடுஞ் சற்ஜனர்கள் தன்
கோதிலா வுறவுடன் மேலான சாதுக்கள்
        கொள்கை தவராது வேண்டும்
கொடிய பாதகவாத நீர்ச்சுருக்குங் கெட்ட
        குஷ்டமுடன் வெட்டை வாய்வும்
குன்மம் வெடிசூலை சயரோகம் பிளேக்கிதுகள்
        கொஞ்சமும் வராது வேண்டும்
தருமருவு மிவ்வுலகின் மாதர்கள் மயக்கமும்
        சாரா தொளித்தல் வேண்டும்
சகல வினையும் பஞ்சபாதக மிடிமையும்
        தான்பறந் தோட வேண்டும்
தமியே னெனக்குதவி நினையல்லால் வேறுதுணை
        தற்கால மெவரு மிலையே
தற்பரம சற்குருவே சிவராம லிங்கமே
        சுவாமிவந் தருள் புரிவையே.

விநாயகர் ஸ்துதி.

இராகம் நாட்டை   தாளம் சாப்பு.

திருவுற்றி லகு கங்கை யென்ற மெட்டு.

மணி மொய்த்தத் திருவுற்ற   மதுரச் செந்தமிழ் கற்ற
மகிமைப் புகழ் குழந்தை   யூரினில்   வளர்
சுகிர்த ராமலிங் கய்யர்   பேரினில்   நல
மாகதாளமு ராகமோடிசை யாககாவடி பாகசிந்தென
வழுத்தற் கணபதி பொற்   பாதனே   அருள்
அழுத்த வுதவி செய்வாய்   நீதனே

ஈஸ்வர ஸ்துதி.

அரி யற்புத மிகுந்தக்   கையிலைப் பதி புகுந்த
அகிலத் தொழுமுன் வந்த   நாதனே   புனல்
அணியு மதி புனை   விநோதனே   ஜெகம்
ஆதியந்தமு மாய்நிறைந்தசொ ரூபசுந்தர சோதிசங்கர
அய்யனு முமையும் வந்து   கார்க்கவே   சிந்தை
வைய மகிழ வருட்கண்   பார்க்கவே

முருகர் ஸ்துதி.

சிகியுந் தயில் பொருந்த   திசையெங்கும் வலம் வந்த
திவ்ய குழகன் முரு   கேசனுந்   தமிழ்
ஜெயமுரு கலை மின்னின்   நேசனும்   சுய
தேசிகன் சிவராமலிங்க சுவாமி தன்னருளாலே யன்பொடு
சித்தம் வைத்து சிந்துகவி   பாடவே   யிவர்
நித்தமு மென்னுவில் வந்து   கூடவே

தவசி நவர்கள் பந்த   பவ வினையை யொழிந்த
தனிபதி னெண்ப ரருள்   நேசரும்   மூன்று
தமிழ் வல்லவருஞ் சிவ   தாசரும்   முறு
சாதுசங்கம் விளங்க வந்திடு மோதுவேத புராணகாவியந்
தங்கிடுங் குழந்தை நகர்   நாடுவோம்   அங்கு
சந்ததம் நாட்டு வனத்தைப்   பாடுவோம்

வேறு.

இராகம் காப்பி தாளம் ஆதி.

தெள்ளு தமிழுக்குதவு சீலன் யென்ற மெட்டு

மங்குலுங் கலை மின்னெனக் கூடி திரு
மாலு திருப் பாற்கடலை நாடி யுண்டு
மதியுறவே விளங்கும் பொதிகை மலையின்வள
மகிமை சொல்லன் புகுமே 1.

தங்கமுடன் நவ மணி நாடுஞ் சரி
தணியே வயிர மணி மூடுங் கமழ்
தழைக்குஞ் சந்தனம் பன்னீர் குழைக்குங் குங்குமத்தரு
தரிக்கும் மின்னும் விரிக்கும் 2.

சந்தனம் புனுகுரை ஜவ்வாது பரி
சாதுரியம் வீசுடு மங்காது அரி
சடத்துடனே மிகுத்து நடித்துத் துடித்துத் தகு
தாவும் பரி மாவும் 3.

வெண்கவரி மான் மரையின் கூட்டம் யெழிற்
றங்குமை ராவதங் கொண் டாட்டம் முயர்
விண்ணவரருந் தவசு பண்ணுசிவ முனிவர்கள்
விருப்பார் நிறைந் திருப்பார் 4.

உச்சி யண்ட முகட்டுக் கப்பாலே நிமிர்ந்
தோங்கு கதிர் மதியு மிப்பாலே தவிழ்ந்
தன்பரொடு துளைகண்டு நம்புதல் செய்தே வெருண்டு
டோடுவார் ரப்பால் கூடுவார் 5.

புவி யுண்ட முகந்தனைப் போலும் மாரி
புணரியி னினங்கள் மேலும் வாரி
பொங்கு கதிரை மரைத்து யெங்கு மிருளாய் நிரைத்து
புளங்கும் யெங்கும் விளங்கும் 6.

பொன்வரை நிகர்த்த மலை மீது புயல்
புத்த வமுதைக் கொணர்ந் தப்போது நகை
பொழியத் தரனமணி யொளிரக் கிரணக்கதிற்
பூகந் தரு பாகம் 7.

வெள்ள மலற் றுவுகளை மிதிக்கும் நன்னீர்
அள்ளி யள்ளித் தாரைளிற் குதிக்கும் நளிர்
விளையுங் குங்குமம் பன்னீர் தழையுஞ் சந்தனமகில்
மிணக்குஞ் கந்தி மணக்கும் 8.

பலைவன முல்லை வனங் கடந்து வைகை
மாநதி ப்ரவாக மென நடந்து செலும்
வளைசுறு மகரங்கள் கணையின்றி விளையாடி
வருகும் யேரி . பெருகும் 9.

செங்கழு நீரோடை குளம் பொங்கும் மரு
தேசுறுமம் போரு கழு மெங்கும் மலர்ச்
செழிக்கும் வண்டுகள் மனங் கழிக்கச்சங்கீதச் சுதி
தேடுந் தோடி பாடும் 10.

சேற்றினிலே யாமை கண்டு படுக்கும் பூவைச்
சிந்துரமே லானவற்குக் கொடுக்கும் பணைத்
திருவைச்சகியை நிகற் பருவ மங்கையர் மஞ்சள்
தேசும் மணம் வீசும் 11.

தென்குடந்தை யூரில் வளர்ந் திருக்கும் அம்பு
சேர்ந்தவொரு தெப்பக்குள மிருக்கும் பெறல்
சிறக்குந் தீர்த்த மாடிடப் பறக்கும் வல்வினை நோயுந்
தீரும் வந்து பாரும் 12.

செந்தமிழ் குழந்தை வேலு தாசன் மிகு
ஜெய அவதானிபணி யீசன் நெடுந்
தெண்டுக மண்டலமொடு மண்டல மெங்கினு முப
தேசன் சுயம்ப்ர காசன் 13.

வேறு.

பொன்னுலவு சென்னி குளம் நன்னக ரண்ணுமலைதன் யென்றமெட்டு

இராகம் இந்துஸ்தான் காப்பி தாளம் சாப்பு.

செந்திருவு ஐந்தருவு முந்து குழந்தா புரியின்
செருக்கும் நகர் வளத்தைக் கூறுவோம் மனம்
உருக்க விந்திரன் பூசை தேறுவோம் புகு
சிதமாபலத் தாதுமாதுளை யோதுசெண்பக மீதுளங்கனி
தேரிய ரசமலற் றேன் சிந்தவே பாய்ந்து
தேசு பழனங்க ளிட முந்தவே 1.

தேருபுய வீமனெனுங் கூறுமாதி சேடனெனுந்
திடமுள்ள வர்க ளுழச் சென்றன மலைத்
திண்டெனப் பகடு வந்து நின்றன பெருஞ்
சீருடன்குரு பாகதன்சிர மீதுமேவிட வேதனன்பொடு
சித்த மகழ்ந்தே கலப்பை நாட்டியே சுப
ஜெய வென வுழுது பாராட்டியே 2.

நன்னயமாய்ச் சாலடிக்க வண்ணமுரு மாங்கனியை
நாடியே பரிக்க வகங் கூடியே சங்கைச்
சாடி யெரியக் குரங்கு பாடியே கன
நாகரீகம வேகமாய்ப் பலசேகரக் கனியே யெரிந்திட
நன்றெனப் பிடித் தெடுத்து வுண்டனர் பசி
யொன்று மில்லை யென்றங்கனங் கண்டனர் 3.

சுந்தரமாய் மேடுபள்ளங் கந்தமுடனுஞ் சரியாய்
சொந்தமுற வப்ப ரம்பைப் பூட்டியே யடிக்கச்
சந்தனச் சவ்வாது வுரங் கூட்டியே தகை
சூழ்வரம்பினை பேயெடுத்திட நீழ்முகப்பது போற்றடுத்திடச்
சுத்த மாகவே மெழுகித் தேற்றினர் மேலே
யொத்த தள மாகவே காப்பாற்றினர் 4.

சித்துமிகும் அத்துவித வஸ்துசிவ ராமலிங்கச்
சித்தனைத் தொழுது விரை தெழிக்கவே சாலி
நித்தம் வளர்ந்தொரு திங்கள் கழிக்கவே தளிர்
சேருநாற்றெடுத் தேகரத்தினை கூருமாமுடி யேமுடித்தனைத்
திட்டமாய்க் கட்டைக் கொணர்ந்து சேர்த்தனர் கடைமின்
சீக்கிரம் நட்டு நடுகை பார்த்தனர் 5.

செந்நெல்மிகுந் தேநிறைந்து மன்னுகதி ரண்டமட்டுஞ்
செழித்து நிமிர்ந்து வளர்ந் தோங்கவே சுற்றும்
மொழிக்கரும் மிஞ்சி மஞ்சள் தாங்கவே முது
தேருபங்கய மூறுசிப்பிகள் கூறுமுற்றினை யேதன் முட்டைதன்
றெழிந்து மகிழ்ந் தனங்கள் பேணுமே கயல்
சினை விருக் கன்றுடனே தோணுமே 6.

மன்றினுலே பாரபக்ஷ மின்றியே வழக்குரைக்கும்
மன்றிலும் பேடுங் கனங்கள் கூடுமே மஞ்ஞை
யன்று தோகை விரித்துநின் றுடுமே சொனும்
மாதமொன்று மும்மாரி பெய்திடச் சிதளக்குயி லோதுகிள்ளைகள்
மணி ரெங்கு ராகங்களைப் பாடுமே மந்தி
மதுவருந்திக் கொண்டு கூத் தாடுமே 7.

பொன்னுலவு தென்குழந்தை நன்னகர மேவிவளர்
புண்ணியவ ரத்தினர னேகமாய்க் கூடிப்
பொன்னகஞ் செந்நெல் நிறைத்துப் பாகமாய் அஷ்ட
போகமாகவும் யோகதம்பதி சேகரத் தொடுநாக மன்னெனப்
புத்திரர் பவுத்திரர் நற் பாக்யமாய் நிதி
நித்தியமாய் வாழ் வார்கள் சிலாக்யமாய் 8.

அந்தரத்தோர் வந்துபணி யெந்தை சிவ ராமலிங்க
அய்யரருள் கோவிலைக் கண் பாருமே அஸ்தி
வாரமும் பலமும் யென்றுந் தேருமே கதிர்
ஆதிமாமணி சோதிகுருமணி கோதிலாதவெண் டரளநவமணி
அங்கனகங் களுடனே பதிக்குமே யொளி
யாதவனைப் பின்புகவந் துதிக்குமே 9.

எண்டிசையோர் கண்டுதொழ அண்டமுட்டுங் கோபுரத்தை
இந்திரனும் பூசைபுரிந் தேற்றவே மகிழ்ந்
தைந்தருவும் புஷ்பமலர்ச் சாற்றவே யெங்கும்
யேதுமிணையுமி லாததிருமதி லீலனுருகயி லாசமிதுவென
யிசைந்தருளும் விமானம் ருசிக்கவே அதில்
யென்றும்ராம லிங்கய்யரும் வசிக்கவே 10.

—o—

வேறு.

இராகம் தேசிக தோடி தாளம் ரூபகம்.

ஆறுமுகவடி வேலவனே கலியாணமும் யென்ற மெட்டு.

ஆதிகெற்பக்கிரக மஸ்தமண்டபங்கள் அருகால் பீடமிலங்கும்—மணி
யாரும்ரிஷபத் தடிமண்டபத்தி னருமைமிகத் துலங்கும்

சித்திக்கணேசர் முருகர்பைரவர் தெக்ஷணமூர்த்தி கண்டோம்—மிவர்
தீர்க்கமாவாலய முமடப்பள்ளி சிறக்கும்படியும் விண்டோம்

சோதிப்ரகாசமிகுத்துவிண் ணுட்டின்சுய ஸ்தம்பமேலோங்குந்—தூசு
சுத்தமாய்க்கோபுர ஸ்தூபியுந் தூசிதுடைத்திடும் பாராங்கும்

சந்தனம்விபூதி வில்வம்துளபமுன் தண்மலர்கள் கோடி—விரை
சாந்துபுனுகு சவ்வாதுபன்னீருடன் தானெடுத்தார் தேடி

மங்களவாத்தியஞ் சங்குசேகண்டிவிண் வஞ்சத்தொனிகதிக்குந்—திரு
மஞ்சனநீராட்டிடும் ஐராவதம் வாழ்த்திமிகத் துதிக்கும்

ஆதிமறையவர் தேசிகராமலிங் கய்யர்க் கபிஷேகம்—செய்து
அன்னநைவேதன தூபங்கள்தீப மருச்சனைகள் பாகம்

சித்தர்முனிவர்க ளெத்தலத்தோர்சிவ சித்திகளும்பெருக—மிகு
தேசோன்மயவய்யர் பாதமிணைகளைச் செப்பினரன்புருக

அந்திருவாசகஞ் சிந்துகள்மந்தர மறிந்துசொல் வல்லோர்க்கும்—அவ
அந்தரங்கபக்தி முத்தியுண்டாக்கி அருளுவரெல்லோர்க்கும் [ர்

பக்தனுங்குழந்தை வேலவதானியின் பாடுந்தமிழ்க்குதவி—யிந்தப்
பாரிலெங்கள்சிவ ராமலிங்கர்பதம் பணிவர்க்கே நற்பதவி.

வேறு.

இராகம் தேசிக தோடி தாளம் ரூபகம்.

சேந்தின் மாநகரந்தனில் மேவிய யென்ற மெட்டு.

சித்துயர்சிவ ராமலிங்கய்யர் தஞ்
சீர்மிகுஞ் சன்னதி சாரும் அந்த
வீதியிருக்கின்ற நேரும் மொலி
சித்திரத் திலும் வைத்த மாநவ ரத்தினக் கல்பதித்து ஓத்திடும்
திங்களாத வனுங் கண்டு வெட்குரும்
தேசு விளங்கும் பொற்றேரும் அதின்
வாசமலர்க ளங்காரும் 1.

வையகம் புகழுங் குழந்தாபுரி
மாநகரதின்கண் கேளும் நாலு
வர்னத்தவர்க ளென் ஞளும் மா
வந்துரைந்து நிறைந்து கொந்தள மங்களங்கள் புரிந்திலங்கிட
வான மேதுரு மாமட மாளிகை
வாய்ந்து மிவ ரென்றும் சூழுந் தினம்
மகிமையாய் மிகவாழும் 2.

தேவமாநன் னகர்க்கு மேலாமெந்தத்
தெருக்களிலுந்தே ரோடும் பக்கத்
தருக்களுமுற வாடும் நவ
சித்தருந்தவ பக்தருஞ்சிவ நித்தருங்கன சுத்தருமிவர்
தியானிக்குஞ் சன்யாசி தவசிக்குந்
திடத் துடனே நிதானம் மாகக்
கொடுப்பாரே யன்னதானம் 3.

வேறு.

பாளைவாய் கமுகில் வந்து யென்ற மெட்டு.

சென்னைபுரி சிவகெங்கை சீமையா மானுமதுரை
சேர்ந்த கட்டிக் குளமது நேத்ரமே பெருஞ்
சீர் குழந்தை யூரெனும்நற் க்ஷேத்ரமே 1.

காசிலிங்க மாங்கணேசர் கண்டசிவ ராமலிங்கக்
கர்த்தனையற் சித்தகுரு நாதனை சித்துக்
காரணம் விளங்குஞான போதனை 2.

சோதியாய் வளம்பெருகும் நீதிகுழந் தாபுரியின்
சூட்டுக்கோல் ராமலிங்கய்யர் சித்தினை யனந்தம்
மேட்டிமையாகு மிதனின் பத்தினை 3.

வாசமிகுந் தென்புதுவை மானகரின் ராமலிங்க
வள்ளல்துணைக் குழி கூட்டுக் கோலுமே அன்பர்
மாவரந்தந் தருள்வர்மென் மேலுமே 4.

சாதுருங் குவளைநகர் தங்குசிவ ராமலிங்க
சாமியின் மகிமையரி தாகுமே வந்து
தியானிக்கும் பக்தர்கள் துயர் போகுமே 5.

பொன்னிலங்கு பக்ஷமானின் நன்னகர மேவிவளர்
புண்ணியராம லிங்கர்பொற் பாதமே நித்தம்
போற்றுவர்க் கருள்வரப்ர சாதமே 6.

உம்பர்தொழு தென்குழந்தை யூரில்வள ராமலிங்க
உத்தமர் மகத்துவநன் னிதியே வினவ
அத்துவித மாமெதற்கு மாதியே 7.

காவடியே கட்டியவர் சேவடிக்கே தஞ்சமென்றுங்
காத்திருப் போர்க்கும் வல்வினை தீருமே கழல்
கண்டுகொண்டவர்க்கு முக்தி நேருமே 8.

சோதினையாய்க் காவடியைக் கட்டினவர்க்குங் கனவவில்
சொல்லிவெறுஞ் செம்பதனில் துலங்கவே பாலை
சூட்சமாயள்ளிக் கொடுப்பா ரிலங்கவே 9.

சுத்தமன்னஞ் சர்க்கரைதேன் சொல்லுபல வாகியபாத்
துய்ய காவடியனந்த மாடியே வருந
துங்கவய்யன் சன்னதியை நாடியே 10.

மாகொடிய காசகுன்மம் வாட்டிடும் வெண் குட்டமுடன்
மண்டைவலி நீர்ச்சுருக்கு வாதமும் அண்ட
வாயுவு கண்ணோவு மூல பேதமும் 11.

நெஞ்சடைப்புச் சூலையரை யாப்புடன் மேகங் கிரந்தி
நீரழிவுபீழை யன்னத் துவேசமே விஷ
நேசமெல்லா வாங்கொடிய மோசமே 12.

காலராப் பிளேக்குசுரங் காமநோய் வயிற்றுவலி
கல்லடைப்பு தந்தரோகங் காச்சலாங் கொடிய
கக்குவான் கணைகள்ஜன்னி மாச்சலாம் 13.

தென்குழந்தை மாநகர்வாழ் தேசிக ராமலிங்கய்யர்
சிற்சபை கண்டுபணிய நாளுமே பிணி
தெரிக்கும் பஞ்சனவிட்டு மாளுமே 14.

வேம்பரசு சங்குவிகா வீழியுமொன் ருகிமணம்
விளைவா யருமலர்கள் மழையுமே மின்
விரிந்த தளிருடனே தழையுமே 15.

அஞ்சுமர மோர்மரமாய் மிஞ்சுதரு வாய்நிறைந்த
ஆச்சரியங் காணமிக வாகுமே யுரை
அரிகண்டமு மமிர்த மாகுமே 16.

பிள்ளையில்லா மலடிக ளுள்ளபடி நாலுதிங்கள்
பிரியமாய்ப் போய்வணங்கச் சிறக்குமே குழந்தை
பிசகாமலே கொடுத்துப் பிறக்குமே 17.

சித்தர்கட்கு முத்தர்கட்கும் தேரியேபயத் தெடுத்துத்
தெரியவோ ராயிரமாற் ருக்கியே தங்கந்
தெரிசித்தோர்க்குக் கொடுப்பார் தேக்கியே 18.

ஆதியெங்கள் ராமலிங்க வையயன்மேற் கவிபுரிந்த
அன்பனுங் குழந்தைவேலன் வருந்தவே யின்றே
ஆதரித்தே னென்றுவந்து பொருந்தவே 19.

வேறு.

இராகம் தேசிக முகாரி அடதாளம்.

பூமி மெச்சிடும் யென்ற மெட்டு.

வாசியேரு குழந்தாபுரியின் ராம லிங்கமே
நல்ல தங்கமே பக்த துங்கமே பாண்டி
வங்க அங்கஜெக மெங்குமே நிறைந்த புங்கமே
சாது சங்கமே 1.

தேசிகக்களப மோங்குநந்தவன முறையுமே
உயர்ந் திறையுமே யங்கு விறையுமே அரி
சிறக்கு முல்லைபிச்சி நிறக்குமாமலர்கள் நிறையுமே
பட்டி தறையுமே 2.

தாது தங்குமிரு வாட்சி சண்பகமு மீறுமே
அதிற் பாருமே கண்டு கூறுமே பச்சை
தளிர் சிவந்திகொன்றை ரோஜா மந்தாரைக ளேறுமே
மிகுந் தாருமே 3.

மாசருமலர்கள் மாலைஅர்ச்சனைக்குத் தருகுமே
மிகப் பெருகுமே தினம் வருகுமே களி
வண்டு கண்டுமனம் கொண்டு ராகம்பாடி யுருகுமே
மரு மருகுமே 4.

பாதரிகமுகு மாவு சந்தனமுஞ் செழிக்குமே
பன்னீர் களிக்குமே மதுகொப் பழிக்குமே ஜோதி
பாரிஜாதமைந்து தருவின்புஷ்பம் பரிந் தெளிக்குமே
நிறை குளிக்குமே 5.

சீதளத்துளப மோதுவில்வமுயர்ந் திருக்குமே
பங்கி செருக்குமே விண்ணின் தருக்குமே மேலாய்
சித்தர்முத்தர்குரு பூசையன்னமட மிருக்குமே
யெங்கும் பெருக்குமே 6.

பாரிலெங்கள்சிவ ராமலிங்கர் பதம் பாடவே
மனங் கூடவே யவர் நாடவே சிறு
பாலனுங்குழந்தை வேலன்பக்தி உற வாடவே
படிக்கொண் டாடவே 7.

வேறு.

மஞ்சுநிகர் யென்ற மெட்டு.

பொங்குதிங்கள் பங்குனிமாத முத்திரவுடு யிருதியாகப்
போற்று தசநாளை நன்னீதம் முடன்
புண்ணியஞ்சிவ ராமலிங்கசுவாமி தன்மன மகிழ்வுதங்கவே
புனிதவுற்சவ முடிந்ததே அநநகர்சுற்றி வரங்கொடுத்து
பொன்நெடுந்தே ரோடிவந்ததே 1.

தீர்த்த உற்சவப்ரவேசமே சிவராமலிங்க சுவாமியவற்குத்
திருக்கண்மண்டபம் விஸ்வாசமே குளிர்
தேரும் வைகையின் மீருமாநதி தீர்த்தமாடியேயய்யன் மகிழ்வுற
தெரிசித்த வர்க்குத்தந்தாரே கண்காக்ஷியெல்லாம் குழந்தாபுரியுந்
திருக்கோவில் வந்து சேர்ந்தாரே 2.

அன்பர்தொழும் ராமலிங்கமே குழந்தைநகர் தனதுபக்த
ஞனவுய்ய வந்தா ளங்குமே யெங்கள்
அய்யனங்குரு யேரிமேல்புர மெய்யதீர்த்த மழைக்க அன்பனும்
ஆவனுடன் தாகந்தீர்ந்தன ரிருவருமே சதுரகிரி
ஆலயமுங் கண்டு சேர்ந்தனர் 3.

சோதிவிருட்சந் திருந்தவே ஒலிமுபூங்க கல்லிறைற்றுக்கத்
துய்யபா லய்யருந்தவே அன்பன்
சுவாமியெச்சிலை யுண்டுவீங்கவே நேமிபச்சிலை தின்றுநீங்கவே
சொகுசா யைந்துநாள்க்கோடுற்றூர் பக்தனய்பனுங் ககனமார்க்கத்
தாய்குழந்தை யூரின் வந்துற்றூர் 4.

கற்பகக்கணேசன் வாழியே சதாசிவனு முமையவளுங்
கந்தன்குமரேசன்வாழியே யெங்கள்
கலையுந்திருமகள் அலையுநதிலுரு கரியவனுங்கதி ரிரைவிமதியெனுங்
கங்கைசிவனடி வாழியே கஞ்சமலர்ற்றோன் செய்யுஞ்சிருஷ்டி
கவிஞர்மிக வாழ்க வாழியே 5.

திங்களுலவுங் குழந்தையூர்திரு வேட்டையய்யன் அழகியமின்
தேவிநல்ல தங்கமம்மையார் முனி
தேருஞ்சமையணர் வீரபத்திர ரூருகாவல்சப் பாணிகருப்பணர்
தேசுபஜனை மடமுமே சிவகுருநாதர் மற்றவைமுதற்
றெய்வமென்றும் வாழ்கவாழியே 6.

சங்கமிகுங் காலவூழியே சிவராமலிங்க சுவாமியவர்க்குச்
சந்ததம் விளங்கவாழியே மகிழ்வு
சார்ந்திடுங் குழந்தாபுரிநகர் தேர்ந்துயாவுந் தழைக்கவாழியே
தாரணி விஸ்வகுலத்தோனே அஷ்டாவதானி குழந்தைவேல்செந்
தமிழ்சொல்சிந்தும் வாழ்க வாழியே 7.

காவடிச்சிந்து
முற்றிற்று.

171295
600 008.

உ

சிவமயம்.

குழந்தையம்பதியெனும் கட்டிக்குளம்

இராமலிங்கசுவாமி பேரில்

இயற்றிய

ஆனந்தக்களிப்பு.

இஃது

குழந்தையம்பதியெனும் கட்டிக்குளம்

முத்தமிழ் ப்ரமஸ்ரீ வே. இராமலிங்கப் புலவரவர்களால்

இயற்றப்பெற்று

ஷையாரின் புத்திரர் அஷ்டாவதானி

ப்ரமஸ்ரீ ராம. குழந்தைவேலாச்சாரியவர்களால்

மானாமதுரை

மா. நாகலிங்கக் கோனாரவர்கள்

இராமலிங்கம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1933.

சிவமயம்.

ஆனந்தக்களிப்பு.

பூமாது வளர்குழந்தைப் பதியில் வாழும்
புனிதராம லிங்கய்யர் பீதுசந் நதியில்
நாமானந்தக் களிப்பைப் பாட யெங்கள்
நாதன் விநாயகநற் பதமிங்கு கூட 1.

அன்பர்தொழு மய்யனைக் கோரித் தமிழை
அடியேன் மிகப்புகழந் தரிவீரி சூரி
சம்புசிவ சங்கரி வாமி விமலித்
தருணமிது அருள்புரிவாய் சத்திசிவகாமி 2.

ஆறிரு தோளுடை யானே சத்தி
அயில்பிடித் தேவண்ணை மயிலூரு வோனே
சிருள்ள ராமலிங்க வேதா பீதில்
செப்புதற்கு வந்தருளுங் குமரகுரு நாதா 3.

இந்துபுனல் நீரணியுஞ் சடையா வெள்ளை
யேருடையா புலித்தோ லணியு மிடையா
அந்தரி உமை புகழும் வேணி பீதில்
ஆனந்தத் தமிழ்பாட அருள்பரசு பாணி 4.

நாட்டினில் வளரும்பர் மெய்யன் வாலை
நாரணி யாளருள் பெற்றிடு மையன்
சூட்டுக்கோல் ராமலிங்கச் சித்தன் யெழில்
சுயமுள்ள சச்சிதா னந்தபரி சுத்தன் 5.

அட்டமா சித்துள்ள நேசன் யோகி
ஆனந்த மானபரி பூரண விலாசன்
நிட்டை தெளிந்த கனவாளன் வாசி
நிலையாளன் கலையாளன் கிருபையுடை யாளன் 6.

ஞானசற் குருவான யோகி புலவர்
நாயகன் புகழ்ந்திடு மருள்தரும் விவேகி
மோனமுள்ள ராமலிங்கச் சித்தன் வாசி
மூலமெஞ் ஞானத்தில் முத்திதருங் கர்த்தன் 7.

தவமுனிவர் சுந்தரா னந்தர் போகர்
சட்டமுனி கொங்கனர் கருவூ ரமைந்தர்
சிவகமலர் யிடைக்காட்டர் கபிலர் ரோமர்
திருமூலர் மூவ்வாறு பேர்க்குமவர் மேலர் 8.

மெய்யாகி யெல்லோர்க்குங்குருவாய் வந்த
வேதாந்த நாதாந்தச் சித்தாந்த வுருவாய்
அய்யனே உன்மகிமை அருமை அரியார்
அண்ட பிண்டத்துள்ளோர்க் குண்டோநின் பெருமை 9.

ஞான போத கனே சரணம் போக
நாதனே ராமலிங் கய்யா சரணம்
மோன தேசிகனே சரணம் அடியும்
முடியந்தப் பிரணவ வஸ்துவே சரணம் 10.

வண்மையுள்ள பிணி தீர்ப்பாய் சரணம் கொடிய
வஞ்சனைகள் துயரகற்றி வைப்பாய் சரணம்
உண்மை யானந்தக் களிப்பைப் பாட யெனக்கு
உதவியருள் செந்தமிழை உலகோர் கொண்டாட 11.

அண்டர் புகழ் தும்புரு நாரதரும் யோகி
ஆனந்த சாதுக்கள் அடிதவசி யெவரும்
தொண்டர் மிகப் பணிந்திடு மென்னுளும் யெங்கள்
சுவாமி ராமலிங்கய்யர் மிகிமை சொல்லக் கேளும். 12.

அங்கத்தார் சினத்தார் வருவார் யென்னை
ஆண்டகுரு சாமிகா வென்றுரைக்கத் தருவார்
யெங்கு முள்ளவர்கள் பிரார்த்தனையே செய்து
யென்றுமே காவடிக ளெடுப்பார் வந்தனையே 13.

மச்சருடன் காணிக்கை கொண்டே வருவார்
மலையாளத்தார்கள் வருவாரே திரண்டே
அச்சினுட் டனைவர்களும் வருவார் வினைகள்
அணுகாம லென்றென்றும் அருள்தனைப் பெருவார் 14.

ஜம்பத்தார் தேசத்தா ரொன்றே வந்து
ஆளென்ப ரெங்கள்குரு தேசிகா வென்றே
நம்பிக்கை யுடன் வருவாரே அன்பாய்
நலங்கொடுத் தேயவரை நாடிமகிழ்வாரே 15.

குன்மம் வயிற்றுவலி யீளை சோகை
குஷ்டம் கிரந்தி அரையாப்பு காமாலை
ஜென்மப் பிணிகள் முதல்தீரும் வினைகள்
சிதரிடும் ராமலிங்கர் சன்னதியிற் பாரும் 16.

சித்தர் பலர் வருவார்கள் கூடி அருள்
சிறந்திருக்குந் தாணிமட மதனையே தேடி
பக்தியுயர் நித்திய னந்தம் யோகி
பாதமலர் வணங்கி நிற்பார்க ளனந்தம் 17.

மங்கையர்கள் மா தீப மெடுப்பார் சித்தர்
மனமகிழ்ந்தே காக்ஷி பலனது கொடுப்பார்
சங்கு சேகண்டி முழங்கும் யோக
சரிகை கிரிகை ஞானதீபம் விளங்கும் 18.

சிவராம லிங்கய்யர் சந்நதிக்கே யவரை
தேடிவருவாரே குழந்தைப் பதிக்கே
தவயோகத் தவர்கள் வந்து நின்றே அன்பாய்
சத்திசிவ னருள்பெற்ற வித்தகா வென்றே 19.

புதுவையுயர் குவளைநகர் மெய்யன் தினம்
யுதுமை யுடனே தூணிரி பூட்டிருந் தையயன்
பதுமன் முதலோற்கியுஞ் சித்தன் பொருள்
பஞ்சாக்ஷரச் சுளிமுனை சாதனத்தன் 20.

வாசிப் பரிமீதில் நாடி யிந்த
வையகமெல்லா மொரு நொடியில் விளையாடி
காசிகன்னி துரையுலக மெங்கும் ஒரு
கடிகைதன்னில முதளித்த கருணையுளம் பொங்கும் 21.

காலை யறிந்த சிவயோகி யிந்தக்
காசினியி லுள்ளோர்க் கருள்தரும் விவேகி
வாலையருள் பெற்றிடுஞ் ஜோதி நாளும்
மாதவத்தோர் புகழும் மவுன சித்தாதி 22.

தானவ ஞனசிவ மோடி யுள்ள
சற்குரு ராமலிங் கய்யனைப் பாடி
மோனசிவ மாமுனிவர் வருவார் தகு
மூர்த்தி யென்றேயவர் பாதமது பெருவார் 23.

சதுரகிரி பொதி கைலையய்யன் மற்ற
ஸ்தலமெலாஞ் சித்தாக வாழ்ந்திடுந் துய்யன்
பதுமினி வள்ளி மகிழத் தான் வெகு
பக்ஷமுடனே புகழும் பரிபூரணத்தான் 24.

கருணை ராமலிங்கய்யர் வாழும் மெங்கள்
கட்டிக்குளத்தின் நன் வளமதைக் கேளும்
திருபாது வசித்திடு மென்னாளும் மழைகள்
திரண்டேழும் மாரிபெய்து செழிப்புரச் சூழும் 25.

கன்னல் சண்பகக்கமுகு தேங்கும் தேசி
கதலிபலா முந்திரியின் கனிகள்திரண் டோங்கும்
சென்னல் செழித்தேமிகுந்து விளைபும் மருத
சேகரமெலா மிஞ்சி சேர்ந்துஅதில் தழையும் 26.

அருவகை விகற்பத் தழுந்தும் பொல்லா
அசடான ஜலமல கூட்டைச் சுமந்தும்
குருவான தீட்சைகளின் மனமே யில்லா
குணக்கருடன் சற்றும் கூடாதருள் செய்தினமே 36.

திட்ட வேதாகமத்தின் பத்தி சிவ
சித்திக் குளிகையுடன் அஸ்டமா சித்தி
மட்டில்லா ராமலிங் கய்யன் இந்த
மண்டல மெலாம்பணிய வருள்பெருகு துய்யன் 37.

மகிஷ சுரவாத சிவகாமி பெரிய
மவுனகுரு வானஅபி ராமிபுகழ் சாமி
தகுவான பக்தி புள்ளோர்க்கும் நோய்கள்
சாராது முத்திகொடுத்தே வந்துகார்க்கும் 38.

ஆராத பிணிய சஞ்சலமெலாம் கொடிய
வஞ்சனைகள் பில்லி கண்நாவேரு முதலாம்
நீராக்கி விண்ணிற் றுரத்தும் நன்
நிதியெனும் பஞ்சா க்ஷரத்தைப் பரத்தும் 39.

பிறவிக் கடல்தனைப் போக்கும் அன்பாய்
பேரின்பமான குரு பீடத்தை நோக்கும்
வரமான சித்துகள் விளங்கும் அரிய
வய்யனுயர் சன்னதியில் வாத்திய முழங்கும் 40.

தேசத்தோர் காவடி யெடுத்து வெகு
சிறப்புடனே வருவோர்க்குக் காக்ஷிகள் கொடுத்து
வீசுபுகளா யெந்த நாடும் கருணை
மெய்யனிரு பாதத்தை நித்தியங் கொண்டாடும் 41.

ஓயாத குறைகளதைத் தடுத்து தனது
உளமகிழ்ந தன்பர்க்கு சூட்டுக்கோ லெடுத்து
நேயமா யவர்களிடம் நாடி யொரு
நிமிஷமெனு மனுகாது வியாதிகள் பின்னோடி 42.

அந்தகன் வாரானெப் போதும் யெங்கள்
அய்யனும் ராமலிங்க நற்பதத்தை ஓதும்
சொந்தமாய்க் குடிகளை கார்க்கும் பசி
துன்பமெனும் குட்சி வேதனையதனை நீக்கும் 43.

பிள்ளை யில்லா மலடியோர்கள் மிகு
பிரபலமாய்ச் சன்னதியில் பணிந்து நிர்பார்கள்
தெள்ளுமணி போல்சேயும் பிறக்கும் அது
தீர்க்கமாய் வயதுநூறாண்டு வசித் திருக்கும் 44.

வணக்கமுள்ள சித்தர்களைக் குறித்து அன்பாய்
மறவாத குருதீக்ஷை பலனது விரித்து
யிணக்கமுட னுபதேசஞ் செய்யும் அடியர்
யேகாந்த பாதமலர் மறவாது வுய்யும் 45.

சந்ததமும் செம்பொன்னும் புவியும் உயர்
தனதானியங்க ளுயர்ந்தெங்கு மிகக் குவியும்
அந்தமிகு பஞ்ச கிர்த்தியமும் செய்யும்
அய்யன் ராமலிங்க மருளுவர் நித்தியமும் 46.

மூல விநாயகர் தன்வாழி சிவ
மூர்த்திசிவகாமி யானந்தி பதம்வாழி
வேலேந்து முருக ரடிவாழி திரு
வேணுகோபால னழகிய திருவும் வாழி 47.

நாவில கலாவாணி வாழி யெங்கள்
ராமலிங்கய்ய ஸ்ரீருநற் பதமும் வாழி
தேவிபூரணி கலையாள் வாழி சாஸ்தா
திருவேட்டை யய்யன் திருப்பதமும் வாழி 48.

சகல கலைவித்வ ஜனர்வாழி சிவ
சமயங் கடந்த யோகிச னெனும்வாழி
பகலவன் மதி யாவும்வாழி குழந்தைப்
பதிராம லிங்கய்ய ரென்று மிகவாழி 49.

பார்தொழுந் தீர்த்தமுயர் வாழி திவ்ய
பாடகசாலை சிவபஜனை மடம் வாழி
சிர்விஸ்வ குலராம லிங்கம் வாணன்
செப்பிய வானந்தக் களிப்பும் வாழியதே 50.

ஆனந்தக்
களிப்பு
—
முற்றிற்று.

ராமலிங்க சுவாமி பேரிலியற்றிய கீர்த்தனே.

இராகம் எதுகுல காம்போதி.   தாளம் ஆதி.

171295

பல்லவி.

ராமலிங்க குரு   சுவாமி பொற்பதத்தை
நாள்தோறுந் துதி   நெஞ்சமே

அநுபல்லவி.

பூமகள் மேவுங்   குழந்தைப்பதிக்கருள்
பூட்டிமெஞ் ஞானத்தை   நாட்டிய சூட்டுக்கோல்   (ராம)

சரணங்கள்.

ஆதியுமந்தமு மில்லாத வஸ்துவை அன்புடனே யறிந்தேறி—மனு
நீதியுடனுலகுக் கெல்லாஞ் சித்தாக நிறைந்து விளங்கு முராரி—திரு
வீதியில்வாசிப் பரிதனிலேரிய மெஞ்ஞான சமுசாரி—ஜெக
ஜோதியான பரமானந்த மாகத்துலங்கிய மெய்யருள் வாரி—தி
சுத்தனேச் சிவபக்தனே தவமுத்தனே நவசித்தனே—யெழு

துலேயிலு மலரலேயிலும் புவிமலேயிலும் புகழ்கலேயிலுந் திகழ்   (ராம)

பந்தவல் வினேநோயுங் காமக்குரோதமும் பாவமுந்துன்பமும் தீரும்—யுப
சந்ததமும் சிவயோகமும் பேரின்பசாயுஜ்யபதம் சேரும்—பவ
தொந்தமாய் மென்மேலுமிருங் கவலேதுலேயாப் பிரவியுமாரும்—சொலு
மந்திரம் பில்லியும்யேவலும் சூனியம்வந்தனு காதருள்னேரும்—வெகு
மைய்யதகநல செய்யவருபல தைய்யலர்புலவி பொய்யென—வகலும்

மமதையுள்ளசிவ சமயகுருபர விமலமலர்தரு கமலமலரடி   (ராம)

தேவர்முனிவர் பதிணெண் சித்தாதிகள் சித்தமகிழும் விநோதன்—கொடும்
பாவக்குணலயத் துரோகக் கெனும்பொற் பதமருளாதிரு நாதன்—யிந்த
ஆபத்துவேளேக் கடியார்க்குதவும் மனேகமுதவிசெய் போதன்—புவி
காவலர் மெய்த்திடும் ராமலிங்கஞ்சொல் கவிக்கருள் கூர்மனு நீதன்—ஜெய
கந்தமலர்முக விந்தைமகிமை சிறந்துமருவு குழந்தைநகர்—வரும்

கதியிலும்பொருள் நிதியிலும்உயர் மதியிலும்சிவ பதியிலும் மிகு (ராம)

கலித்துறை.

கட்டிக்குளந் தனேப்போற் பகர்ந்தாடவர்கள் முன்னம்ப
கட்டிக்குளந்தனில் பொட்டிட்டு கொங்கையை காட்டித்தங்கக்
கட்டிக்குளந் தனேவைக்குமின் னார்மயக்கந்த விழ்ப்பாய்க்
கட்டிக்குளந் தனில்மேவிய ராமலிங்கக் குருவே.

பக்கம்.	கண்ணி.	பிழை.	திருத்தம்.
		காவடிச்சிந்து.	
4	9	மலைவன	மலைவள
	,,	கணையின்றி	களையின்றி
	11	திருவைச்சகியை	திருவைச்சசியை
	2	சித்த மகழுந்தே	சித்த மகிழ்ந்தே
5	6	யேதன் முட்டைதன்	யேதன் முட்டையென்
	7	மன்றினாலே	மன்றினிலே
6	...	துளபமுன்	துளபமுந
8	9	கனவவில்	கனவில்
	14	பஞ்சன	பஞ்சென
		ஆனந்தக்களிப்பு.	
13	7	மேனமுள்ள	மோனமுள்ள
14	12	மிகிமை	மகிமை
	13	முள்ளவர்கர்கள்	முள்ளவர்கள்
15	18	மாதீப	மாத்தீப
	26	விளைபும்	விளையும்